செ.வெ.எண்:29/2020 நாள்:16.11.2020

## சிவகங்கை மாவட்டம்

**வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிட்டு மாவட்டத்தில் ஆண் வாக்காளர்கள் 5,70,681ம், பெண் வாக்காளர்கள் 5,87,330-ம், மற்றவர்கள் 62 வாக்காளர்களும் என மொத்தம் 11,58,073 வாக்காளர்கள் உள்ளார்கள் மேலும், புதிய வாக்களார் பெயர் சேர்த்தல் மற்றும் நீக்கம், திருத்தம் குறித்து 15.12.2020-க்குள் தெரிவிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பி.மதுசூதன் ரெட்டி.,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.!!!**

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் இன்று (16.11.2020) வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பி.மதுசூதன் ரெட்டி.,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் வரைவு வாக்காளர் பட்டியலை வெளியிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில்,

இந்திய தேர்தல் ஆணைய உத்தரவின்படி, இன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. சிவகங்கை மாவட்டத்தில் 184-காரைக்குடி சட்டமன்ற தொகுதியில் **345** பாகங்களில் **345** வாக்குச்சாவடிகளில் ஆண் வாக்காளர்கள் **1,52,707** பெண் வாக்காளர்கள் **1,57,044** மற்றவர்கள் **44-ம்,** மொத்தம் **3,09,795** வாக்காளர்களும், 185-திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதியில் **334** பாகங்களில் **334** வாக்குச்சாவடிகளில் ஆண் வாக்காளர்கள், **1,42,343** பெண் வாக்காளர்கள் **1,46,981** மற்றவர்கள் **11-ம்,** மொத்தம் **2,89,335** வாக்காளர்களும், 186-சிவகங்கை சட்டமன்ற தொகுதியில் **348** பாகங்களில் **348** வாக்குச்சாவடிகளில் ஆண் வாக்காளர்கள் **1,43,238** பெண் வாக்காளர்கள் **1,47,760** மற்றவர்கள் **2-ம்,** மொத்தம் **2,91,000** வாக்காளர்களும், 187-மானாமதுரை (தனி) சட்டமன்ற தொகுதியில் **321** பாகங்களில் **321** வாக்குச்சாவடிகளில் ஆண் வாக்காளர்கள் **1,32,393** பெண் வாக்காளர்கள் **1,35,454** மற்றவர்கள் **5-ம்,** மொத்தம் **2,67,943** வாக்காளர்கள் என ஆக மொத்தம் பாகங்கள் **1,348,** வாக்குச்சாவடிகள் **1,348**, ஆண் வாக்காளர்கள் **5,70,681** பெண் வாக்காளர்கள் **5,87,330** மற்றவர்கள் **62** என ஆக மொத்தம் **11,58,073** வாக்காளர்கள் கொண்ட வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், இந்திய தேர்தல் ஆணை அறிவுரையின்படி மேற்கண்ட வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியில் புதிதாக பெயர் சேர்த்தல் மற்றும் நீக்கம், திருத்தம் இருந்தால் உரிய படிவங்கள் பெற்று பூர்த்தி செய்து 15.12.2020-க்குள் கோட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகங்களிலும், மற்றும் வாக்குச்சாவடி மைய அலுவலர்களிடம் வழங்க வேண்டும். மேலும் பொதுமக்கள் நலன்கருதி 21.11.2020 மற்றும் 22.11.2020 ஆகிய இரண்டு நாட்கள் வாக்காளர்கள் சேர்ப்பு குறித்த சிறப்பு முகாம் நடைபெறுகின்றன. இம்முகாமில் விடுபட்டவர்கள் பெயர் சேர்க்கவும், மற்றும் திருத்தம், நீக்கம் குறித்தும் விண்ணப்பிக்கலாம். அதேபோல் டிசம்பர் மாதம் இரண்டு நாட்களுக்கு சிறப்பு முகாம்கள் நடைபெறுகின்றன. இம்முகாம்களின் நோக்கம் தகுதியுடைய வாக்காளர் பெயர் விடுபடக்கூடாது என்பதே ஆகும். அந்த வகையில் ஒவ்வொரு வாக்குச்சாவடி மைய அலுவலர்களுடன் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினர்

நியமிக்கப்பட்ட வாக்குச்சாவடி அலுவலர்கள் ஒருங்கிணைந்து செயல்பட்டு புதிய வாக்காளர் சேர்ப்பு மற்றும் முகவரி மாற்றம் திருத்தம், பெயர் நீக்கம் குறித்து கண்டறிந்து உடனுக்குடன் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அதேபோல் கோட்டாட்சியர்கள் மற்றும் வட்டாட்சியர்கள் பெறக்கூடிய மனுக்களின் பெயர் நீக்கம், மற்றும் முகவரி மாற்றம் குறித்த மனுக்களுக்கு உடனடியாக களப்பணி மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பி.மதுசூதன் ரெட்டி.,இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.க.லதா, வருவாய் கோட்டாட்சியர்கள் திரு.முத்துக்கழுவன்,(சிவகங்கை) திரு.சுரேந்திரன்,(தேவகோட்டை) மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.சிந்து, வட்டாட்சியர்கள் (தேர்தல்) திரு.கந்தசாமி, திருமதி.மைலாவதி, மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள், அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**::வெளியீடு::**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**சிவகங்கை.**